செய்தி வெளியீடு எண்:283 நாள்: 16.06.2021

செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு உச்சிப் பிள்ளையார் திருக்கோயில் பக்தர்களுக்கான ரோப்கார் அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்தும், கருர் அய்யர்மலை அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் ரோப்கார் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் கள ஆய்வு.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு நீண்ட நாளாக நிலுவையிலுள்ள திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் திருக்கோயிலுக்கு பக்தர்கள் சிரமமின்றி சென்றுவர ஏதுவாக ரோப்கார் அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்து இன்று (16.06.2021) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் பார்வையிட்டு முன்கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. இனிக்கோ இருதயராஜ் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் திருச்சிராப்பள்ளி மண்டல இணை ஆணையர் திரு.அர.சதர்சன், திருக்கோயில் செயல் அலுவலர் மற்றும் பொறியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் அய்யர்மலை, சிவாயம் அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு பக்தர்கள் சென்றுவர ஏதுவாக ரோப்கார் வசதி கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் நேரில் பார்வையிட்டு அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், திருக்கோயிலுக்கு ரோப்காரில் செல்லும் பக்தர்களுக்கான நுழைவு சீட்டு பெறுவதற்கான கவுன்ட்டர், வரிசை ஒழுங்கு (Que Line) இணைப்பு சாலை வசதி, மலைக்கோயிலில் பக்தர்களுக்கான நவீன கழிவறை வசதி, ஓய்வறை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுக்கவும், ரோப்கார் மேல் தளத்திலிருந்து மலைக்கோயிலுக்கு செல்ல லிப்ட் வசதி, வன விலங்குகளுக்கான தண்ணீர் தொட்டிகள் அமைத்தல், மலையில் ஏறுவதற்கான

படிக்கட்டுகளில் உள்ள நிழல் மண்டபங்களை மராமத்து செய்தல் போன்ற பணிகளை திருப்பணி வல்லுநர் குழுவின் கருத்துரு பெற்று பணிகளை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு அமைச்சர் ஆலோசனைகளை வழங்கினார்.

ரோப்கார் இயக்குவதற்கு நிலுவையில் உள்ள Extra Break Engine, Reske Engine, Cabin Boxes, Carriage & Hangers தரைத்தளம் பணிகள், மலைமேல் உள்ள ரோப்கார் நிலையத்தில் டைல்ஸ் பதித்தல் அகிய பணிகளை விரைவாக முடித்து பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வுகளின்போது குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா. மாணிக்கம் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், கரூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் த. பிரபு சங்கர், இ.ஆ.ப., திருப்பூர் மண்டல இணை ஆணையர் திரு. நடராஜன், திருக்கோயில் செயல் அலுவலர் மற்றும் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9